இணைப்பு I

(2 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 874-க்கான விடையைக் காண்க.)

விவர அறிக்கை.

திருவாளர்கள் இராமச்சந்திரா கெமிக்கல்ஸ் என்ற நிறுவனம் எப்பொழுதும் மூடியே இருக்கிறது. இது ஒரு கனரகத் தொழிற்சாலை. இந்நிறுவனத்தின் சார்பில் பதில் சொல்ல ஒருவரும் இல்லை.

2. நேரிடையாக அரசு எந்தவித கடன் உதவியையும் இந்நிறுவனத்துக்கு கொடுக்கவில்லை எனினும், இத்தொழிற்சாலை, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TII.I.C.) தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT) மற்றும் இந்தியன் வங்கி ஆகிய மூன்று நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்றிருந்ததாகவும், தற்போது கீழ்க்கண்ட தொகைகள் நிலுவையில் இருப்பதாகவும் தெரிய வருகிறது :—

(1) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்துக்குச் சேர வேண்டிய தொகை.	ரூ. 41.43 இலட்சம்.
(2) தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்திற்குக் கொடுபட வேண்டிய தொகை.	ரூ. 28.11 இலட்சம்.
தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்திற்குக் கொடுபட வேண்டிய தொகை மத்திய நிதி உதவி (மானியத் தொகையாக).	ரூ. 5.00 இலட்சம்.
(3) இந்தியன் வங்கிக்கு சேர வேண்டிய தொகை. (சென்னை உயர்நீதி மன்றத்தில் இதற்காக இரண்டு வழக்குகள் தொடரப்பட்டுள்ளன).	ரூ. 56.69 இலட்சம்.

இந்நிறுவனம் புதுக்கோட்டை எலக்ட்ரிசிடி சிஸ்டம் என்ற அமைப்பிற்கும் மின்சார பாக்கியாக ரூபாய் 1,44,012.76 செலுத்த வேண்டியிருப்பதாகவும் இது குறித்து சிவில் கோர்ட்டில் டிக்ரி (Decree) ஒன்றும் மேற்படி வாரியத்தாரால் (Board) பெறப்பட்டுள்ளது என்றும் தெரிய வருகிறது.

1981 ஏப்ரல் 25]

இந்நிறுவனத்தைத் திரும்பவும் இயங்கச் செய்ய இவ்வரசின் நிதி நிறுவனங்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் யாவும் பயனளிக்கவில்லை என்பது வருந்தத்தக்கது. இத்தொழிற்சாலையிலுள்ள குறைபாடுகளை நீக்கி அதனை இயங்க வைக்க யாரும் முன்வரவில்லை. ஆகவே, கடனுதவி அளித்துள்ள நிறுவனங்கள், அவைகளுக்குள் கலந்தாலோசித்து தொழிற்சாலையை விற்று விட முடிவெடுத்துள்ளன.

இணைப்பு

(64 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மீன் வளத்துறை

கொள்கைக் குறிப்பு

1981-82

சாதாரண மக்கள் வாங்கி உண்ணும் அளவிற்கு மலிவான விலையில் கிடைக்கும் மீன் அதிக புரதச் சத்து நிறைந்ததாக தொடர்ந்து விளங்குகின்றது. இந்த மீன் உணவை அதிக அளவில் உற்பத்தி செய்வது மாத்திரமல்லாது, ஏழை எளிய மக்களுக்கும் நியாயமான விலையில் கிடைக்க வேண்டும் என்பதும் அதே நேரத்தில் அந்த மீனைக் கொண்டு வரும் மீனவர்களுக்குப் போதிய வருமானத்தையும் கொடுக்க வேண்டும் என்பதும் அரசின் முக்கிய நோக்கமாகும். தமிழகத்தில் கடல், நன்னீர் மற்றும் உவர் நீர் ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் மீன்வளம் அதிக அளவில் இருக்கின்றது. தமிழகத்தில் 1,000 கிலோ மீட்டர் நீளமுள்ள கடலோரப் பகுதியில் கடல் மீன்கள் பிடிப்பதற்கு நல்ல வாய்ப்பு உள்ளது. அதேபோன்று சுமார் 3.69 இலட்சம் ஹெக்டேர் பரப்புள்ள உள்நாட்டு மற்றும் உவர் நீர் நிலைகளிலும், மீன்கள் வளர்ப்பு செய்ய வாய்ப்புள்ளது.

2. தமிழ்நாட்டின் சிறந்த மீன் வளத்தைக்கருத்தில் கொண்டு தமிழக அரசு ஒரு பணிக் குழுவை ஏற்படுத்தி ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்கான மீன்வள அபிவிருத்தி திட்ட அறிக்கையை மத்திய அரசின் திட்டக் குழுவோடு கலந்து பேசி தயார் செய்து மீன் வளத்திற்கு ரூ. 2,400 இலட்சம் ஒதுக்கீடு செய்ய முடிவு செய்துள்ளது. உலக வங்கியின் பொருளாதார உதவியோடு அமல் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பெரிய அளவு மீன் வளத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூ. 1,000 இலட்சமும் இதில் அடங்கும்.